**சுருக்கம்**

பொது விநியோகத் திட்டம் – நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளை 100% தலதணிக்கை செய்தல் – ஒதுக்கீடு செய்த தொகையில் செலவிடா தொகையினை ஒப்பளிப்பு செய்தல் – 2010–2011ம் நிதியாண்டில் செலவுகள் செய்திட அனுமதியளித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(எப்2)துறை

அரசு ஆணை(நிலை)எண். 89 நாள்: 19.7.2010

ஆடி 3, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண்.85, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15.5.2008.
2. அரசு ஆணை (நிலை) எண்.112, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 21.8.2009.
3. அரசு ஆணை (நிலை) எண்.27, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 8.3.2010.
4. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கடித ந.க.எண்.இ.சிறப்பு.5/18690/2009, நாள் 31.3.2010.

-----------

**ஆணை**:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழகத்தில் புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளில் போலி குடும்ப அட்டைகளை கண்டறிந்து நீக்கம் செய்வதற்கு புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகள் தொடர்பான புள்ளி விவரங்களை 100 விழுக்காடு வீடுவீடாகச் சென்று மறு ஆய்வு செய்து உரிய திருத்தங்கள் செய்யவும் மேலும் நகர்புறங்களில் பல்வேறு துறை அலுவலர்களை இச்சிறப்பு பணிக்கென நியமித்து தல ஆய்வுப் பணியினை ஒரு மாத காலம் மேற்கொள்ளவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை நகரில் தாம்பரம், அண்ணாநகர் மற்றும் அம்பத்தூர் மண்டலங்கள் நீங்கலாக சென்னையில் 13 மண்டலங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 1064 தற்காலிக நெல் கொள்முதல் நிலையப் பட்டியல் எழுத்தர்களை கொண்டு தலத்தணிக்கை மேற்கொள்ள செலவினம் ரூ.1,44,42,744/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து நான்கு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து நான்கு மட்டும்) மற்றும் இப்பணிகளை ஒருங்கிணைத்து மேற்பார்வையிட ஆலோசகராக ஓய்வு பெற்ற துணை ஆணையாளர் திரு சொ. சண்முகநாதன் என்பவர் மாதம் ஒன்றிற்கு ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மதிப்பூதியத்தில் 6 மாதங்களுக்கு பணியமர்த்தம் செய்ய ஆகும் செலவினம் ரூ.1,20,000/–(ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஆக மொத்த செலவினத் தொகை ரூ.1,45,62,744/–ம் (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தைந்து இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து எழுநூற்று நான்கு மட்டும்) மற்றும் பயிற்சி வகுப்புகள் நடத்துதல், பொருள் நிறுத்தம் படிவம் மற்றும் பிற எழுதுபொருள் செலவினம் உட்பட தலைமையிட நிர்வாக செலவுக்கு ரூ.10,00,000/–மும் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.1,55,62,744/–(ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தைந்து இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து நான்கு மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் போலிகுடும்ப அட்டைகள் களைதல் சம்பந்தமான பணிகளை கவனிக்க ஓய்வு பெற்ற துணை ஆணையர் திரு சொ. சண்முகநாதன் என்பவரை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் 21.2.2010 முதல் மூன்று மாதங்களுக்கு மட்டும் ஆலோசகர் (போலி குடும்ப அட்டை ஒழிப்பு) என்னும் பதவியில் சிறப்பு அலுவலராக நீட்டித்தும் மாதம் ஒன்றிற்கு மதிப்பூதியம் ரூ.20,000/–வீதம் 3 மாதங்களுக்கு ஆகும் செலவினம் ரூ.60,000க்கு ஒப்புதல் அளித்தும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

4. ஆணையாளர் தமது கடிதத்தில் அரசு ஆணை (நிலை) எண்.112, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 21.8.2009ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.1,55,62,744/– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தைந்து இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்தி நான்கு மட்டும்) நிர்வாகச் செலவனங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.10,00,000/– என்றும் அதில் இதுவரை ரூ.7,01,955/– மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது என்றும் மீதமுள்ள தொகை ரூ.2,98,045/–ஐ 31.3.2010–க்குள் செலவிட இயலாத நிலை உள்ளதால் இந்த தொகையிலிருந்து சிறப்பு அலுவலருக்கு (போலி குடும்ப அட்டைகள் களையும் பணி) 3 மாதங்களுக்குரிய மதிப்பூதியம் மாதம் ரூ.20,000/– வீதம் மூன்று மாதங்களுக்கு ரூ.60,000/–ம் வழங்கிடவும் எஞ்சியுள்ள தொகையான ரூ.2,38,045/–னை நிர்வாக செலவினத்திற்கென இந்த நிதியாண்டில் (2009–2010) அரசுக்கு ஒப்புவிப்பு செய்து ஏப்ரல் 2010–மாதத்தில் அதாவது 2010–2011ம் நிதியாண்டில் செலவு செய்யும் வகையில் அரசின் அனுமதியினையும் பெற்றுத்தருமாறு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலனை செய்து அதன்படி அரசு ஆணை (நிலை) எண்.112, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 21.8.2009ல் நிர்வாக செலவினத்திற்காக அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.10,00,000/–(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) 2009–2010ம் நிதியாண்டில் செலவிடப்படாத தொகை ரூ.2,98,045/–ல் அரசு ஆணை (ப) எண்.188, நிதி/(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு)த் துறை, நாள் 31.3.2010ன்படி சரண் செய்யப்பட்ட சிறப்பு அலுவலருக்கு (போலி குடும்ப அட்டைகள் களையும் பணி) 3 மாதங்களுக்குரிய மதிப்பூதியம் மாதம் ரூ.20,000/– வீதம் மூன்று மாதங்களுக்கு ரூ.60,000/–ம் வழங்கிடவும் எஞ்சியுள்ள தொகையான ரூ.2,38,045/–னை நிர்வாக செலவினம் மேற்கொள்ளவும், ஆகமொத்தம் ரூ.2,98,045/–(ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நாற்பத்தைந்து மட்டும்) நிதி ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையினை கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"3456–00–நுகர்பொருள் வழங்கல் – 800 ஏனைய செலவு – I – திட்டத்தில் சேராதது – AF பொது விநியோக முறையின் கீழ் குடும்ப அட்டைகள் வழங்குதல் – 33. தொழில் முறை சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02. ஊதியம் – ரூ.60,000/–
(து.தொ.கு.3456–00–800–AF–3327)

"3456–00–நுகர்பொருள் வழங்கல் – 800 ஏனைய செலவு – I – திட்டத்தில் சேராதது – AF பொது விநியோக முறையின் கீழ் குடும்ப அட்டைகள் வழங்குதல் – 33. தொழில் முறை சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 72 பயிற்சி – ரூ.2,38,045/–
(து.தொ.கு.3456–00–800–AF–7207)

மொத்தம் –ரூ.2,98,045/–

7. முன்பக்கம் பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினத்தினை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் 2010–11ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி முன்பக்கம் பத்தி 5ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆணையாளர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், பத்தி 5ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–11ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்) துறைக்கு அனுப்பி வைக்குமாறு, ஆணையாளர் , உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–5 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. முன்பக்கம் பத்தி 5ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், 100% குடும்ப அட்டைகள் தலதணிக்கை செய்யப்பட்டு போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு அவைகளை ரத்து செய்ததற்கான மொத்த விவரங்கள் அடங்கிய அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.38/D3/RR/CF&CP/2010, நாள் 15.7.2010 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண் 498 (நானூற்று தொண்ணூற்று எட்டு)–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஸ்வரன் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர்,
உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–5.
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–10.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
மாநிலக் கணக்காயர் (ஏ&இ), சென்னை–18.
மாநிலக் கணக்காயர் (ஏ&இ), சென்னை–18(பெயரில்)
மாநிலக் கணக்காயர் (துணிக்கை), சென்னை–18.
மாநிலக் கணக்காயர் (துணிக்கை), சென்னை–18(பெயரில்)
நகல்:
மாண்புமிகு அமைச்சர் (உணவு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர், (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), அவர்களின் சிறப்புச் செயலாளர், சென்னை–9.
நிதி (வ.செ.பெ–II)/(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), சென்னை–9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்